திரு. கே. எஸ். கணபதி : பல மாவட்டங்களில் ஆசிரியர் இல்லங்கள் அமைப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் எந்த நிதியின் கீழ் மானியம் வழங்குகிறார்கள் ? குறிப்பிட்ட அளவில் இந்த மாவட்டத்திற்கு இன்ன தொகை என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறதா ? கேட்கிறவர்களைப் பொறுத்து வழங்கப்படுகிறதா ? எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப் படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் போட்டிருக்கிற திட்டங் களுக்கு ஏற்ப மானியம் அளிக்கப்படும்.

### *Earned Leave for Aided School Teachers.*

* 154 *Q.*—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Government and Panchayat Union Teachers are eligible for Earned Leave benefits for their attendance in M.E.L.T. Training, whereas Aided School Teachers are not eligible for the same; and

(*b*) if so, the reasons therefor?

### அரசு மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்கள் ஆங்கில மொழி பயிற்றுவிப்புப் பயிற்சிக்குச் செல்லும்போது ஈட்டிய விடுப்புப் பயனைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாய் இருக்கையில், அரசு மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள் இச்சலுகை பெறத் தகுதியுடையவர் அல்லர் என் பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) அரசு, ஊராட்சி மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் ஆங்கில போதனை மையங்களில் பயிற்சி பெறும் காலத்திற்கு ஈட்டிய விடுப்பிற்குத் தகுதியுடையவர் களாவார்கள்.

### *Refund of Increments.*

* 155 *Q.*—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that different categories of teachers have been directed to refund the entire amount which they drew by way of increments prior to 1st January 1975; and

(*b*) if so, the reasons therefor?